[பேரவைத் தலைவர்] [1999 மார்ச் 23

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரைத் தாக்கி கொடும் காயம், grievious injury ஏற்படுத்திய செயலை, பேரவைத் தலைவர் முதல், அனைத்துக் கட்சித் தலைவர்கள், அவையில் அமர்ந்திருந்த அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், பார்வையாளர்கள், அரசு அதிகாரிகள், அவைக் காவலர்கள் ஆகிய அனைவரும் நேரடியாகப் பார்த்த நிகழ்ச்சி என்ற காரணத்திற்காக வழக்கமான நடைமுறையைப் பின்பற்றாமல் சட்டமன்றப் பேரவையே தண்டனை கொடுக்கலாம் என்றும் சட்டமன்றத்தின் இறையாண்மையை — **Sovereignty of the Legislature** — காப்பாற்றும் வகையில் நம்முடைய நடவடிக்கை அமைய வேண்டும் என்றும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏற்கெனவே திரு. தாமரைக்கனி ஒரு வார காலம் சிறையிலே வைக்கப்பட வேண்டும என்று பேரவைத் தலைவர் உத்தரவு பிறப்பித்தது முறைதான் என்று ஏற்றுக்கொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களும் திரு. தாமரைக்கனி அவர்களை அவை உரிமை மீறல் குற்றம் செய்ததற்காக இந்த அவை வன்மையாகக் கண்டித்து, அவருக்கு 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை அளித்து, அவர் சிறையிலே அடைக்கப்பட வேண்டும் என்று ஒருமனதாக முடிவெடுத்து, அதற்குரிய தீர்மானத்தை பேரவையிலே முன்மொழிந்து நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்தினர். தொடர்ந்து இப்படிப்பட்ட குற்றத்தை அவர் இழைப்பாரேயானால் சட்டமன்றத்தின் எஞ்சிய காலத்திற்கு திரு. தாமரைக்கனி அவர்களை வெளியேற்றுவது என்ற கருத்தும் எல்லோராலும் வலியுறுத்தப்பட்டது. இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் பேரவை முன்னவர் அவர்களை தீர்மானத்தை முன்மொழியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

8. அரசினர் தீர்மானம்

பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக உறுப்பினர் தாமரைக்கனிக்கு 15 நாட்கள் சிறைத் தண்டனை

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சியின் தலைவர் திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்

1999 மார்ச் 23] [பேராசிரியர் க. அன்பழகன்]

அவர்களைத் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியுள்ளதன் மூலம், அவை உரிமை மீறல் என்ற குற்றத்துக்கு ஆளானதுடன் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழும் நடவடிக்கைக்கு உள்ளாகின்றார். எனினும் அவரது செயலை வன்மையாகக் கண்டித்து அவையின் மாண்பைக் கருதி, அவருக்கு 15 தினங்கள் சாதாரண சிறைத் தண்டனை விதித்து தண்டிக்கப்பெற வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கின்றது."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

தீர்மானத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சென்னை மத்திய சிறையிலே 15 நாட்கள் சாதாரண காவல் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று அறிவிக்கிறேன்.

பிற்பகல் 1-30

4. அறிவிப்புகள் — தொடர்ச்சி

ஈ. முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா, 22-3-1999 அன்று பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து வெளியிட்ட அறிக்கையின் மீதான உரிமைப் பிரச்சினை குறித்து — பேரவைத் தலைவர் தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 22-3-1999 அன்று பேரவையில் நடைபெற்ற சம்பவம் குறித்து முன்னாள் முதல்வர் அவர்கள் வெளியிட்ட அறிக்கை இந்த அவையின் உரிமையை பற்றிய ஒன்றாகும்